செய்தி வெளியீடு எண் : 06 நாள் :03.05.2018

***தேனி மாவட்டம்,***
***விளம்பர தட்டிகள் மற்றும் பிளக்ஸ் பேனர்கள் அமைப்பது தொடபான ஆலோசனைக்கூட்டம்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது:-***

*****

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பொது இடங்களில் விளம்பர தட்டிகள் மற்றும் பிளக்ஸ் பேனர்கள் அமைப்பது தொடர்பாக வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை, காவல்துறை, கட்சி பிரநிதிகள் மற்றும் அச்சக உரிமையாளர்களுடனான ஆலோசனைக்கூட்டம் இன்று (03.05.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், மாவட்டத்தில் டிஜிட்டல் பேனர்கள், விளம்பர பலகைகள் வைக்க மாவட்ட ஆட்சியரிடம் உரிய அனுமதி பெற வேண்டும். சென்னை உயர்நீதிமன்ற ஆணைகளின்படி பொது இடங்களில் டிஜிட்டல் பேனர்கள், விளம்பர பலகைகள் போன்றவற்றை முறையான அனுமதியின்றி வைக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனவே, அச்சக உரிமையாளர்கள் டிஜிட்டல் பேனர்கள், விளம்பர பேனர்கள் அச்சிடும்போது அதில் மாவட்ட ஆட்சியரின் அனுமதி கடித எண், நாள் மற்றும் அனுமதி காலம் போன்றவற்றை குறிப்பிடவேண்டும். மாவட்ட ஆட்சியரின் முறையான அனுமதியின்றி பொது இடங்களில் பிளக்ஸ் பேனர்கள் அச்சிடக்கோரி வரும் நபர்களது கோரிக்கைகளை அச்சக உரிமையாளர்கள் ஏற்கக்கூடாது. முறையான அனுமதி ஆணைகளை சரிபார்த்த பின்னரே பிளக்ஸ் பேனர்கள், விளம்பர தட்டிகளை அச்சிட வேண்டும்.

டிஜிட்டல் பேனர்கள், விளம்பர பலகைகள் வைக்கப்படவுள்ள இடமானது வெவ்வேறு உரிமையாளர்களின் வசம் உள்ள இடம் எனில் (அரசு / தனியார்) ஒவ்வொரு உரிமையாளரிடமிருந்தும் தனித்தனியாக தடையின்மைச் சான்றும், இலகுவான மற்றும் பாதுகாப்பான வாகனப் போக்குவரத்துக்கோ, மக்கள் போக்குவரத்துக்கோ இடையூறாக இல்லை என தொடர்புடைய காவல் ஆய்வாளரிடம் பெறப்பட்ட தடையின்மைச் சான்றும் பெற்றிருக்க வேண்டும். மேலும், டிஜிட்டல் பேனர்கள், விளம்பர பலகைகள் அமைப்பதற்கு நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகுட்பட்ட கருவூல அலுவலகத்தில் அரசு நிர்ணயத்துள்ள கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். மேற்கண்ட அனுமதி கட்டணத்துடன் கூடுதலாக வைப்புத்தொகையாக ரூ.50/-(ஒரு விளம்பரத்திற்கு) செலுத்த வேண்டும். விளம்பரம் வைக்கும் போது தெரு அல்லது வேறு பொது சொத்திற்கு சேதம் விளைவிக்கப்பட்டால், இத்தொகை திருப்பி வழங்கப்படமாட்டாது. மேலும் சேதமானது இத்தொகையினைவிட அதிகமாக உள்ள பட்சத்தில் கூடுதல் செலவினம் விளம்பர அனுமதி பெற்றவரிடம் வசூலிக்கப்படும். சேதம் எதுவும் இல்லாத பட்சத்தில் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பினால் இத்தொகை திரும்ப வழங்கப்படும்.

கல்வி நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், நோயாளிகள் தங்கியுள்ள மருத்துவமனைகள்., தெருமுனைகள், சாலை சந்திப்புகள், சாலை சந்திப்பிலிருந்து இருபுறமும் 100 மீட்டர் தூரம் வரை, அறிவிக்கப்பட்ட நினைவு சின்னங்கள், சிலைகள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் முன்பாக டிஜிட்டல் பேனர்கள், விளம்பர பலகைகள் அமைக்க கூடாது. அனுமதியின்றி வைக்கப்படும் விளம்பரங்கள் உரிய அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டு, அகற்றுவதற்கான செலவு தொகை விளம்பரம் வைத்தவரிடம் வசூல் செய்யப்படும். அனுமதி பெற்றவர் விதிகளை மீறினாலோ அல்லது விதிகளின்படி நடக்கவில்லை என்றாலோ வைக்கப்பட்ட விளம்பரத்தின் வாசகங்கள் ஆட்சேபகரமாக இருந்தால் உடனடியாக தானாகவோ, அல்லது முறையீட்டின் பேரிலோ விளம்பரங்கள் அகற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.சேதுராமன் அவர்கள், காவல் துணை கண்காணிப்பாளர்கள் திரு.சீமைச்சாமி அவர்கள், திரு.சேது அவர்கள், திரு.பிரபாகரன் அவர்கள், திரு.கணபதி அவர்கள், அரசியல் கட்சி பிரநிதிகள், அச்சக உரிமையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**